**செய்தி வெளியீடு எண் : 542** **நாள் : 07.03.2025**

செய்தி வெளியீடு

**வீடு தேடி வந்து பட்டா மற்றும் வீடுகட்ட ஆணைகள் வழங்க உத்தரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் திருவாரூர் மாவட்டம் திருத்துறைப் பூண்டியைச் சேர்ந்த 77 நரிக்குறவர்கள் நன்றி தெரிவித்து கொண்டாடினர்.**

வீடு தேடி வந்து பட்டா மற்றும் வீடுகட்ட ஆணைகள் வழங்க உத்தரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் திருவாரூர் மாவட்டம் திருத்துறைப் பூண்டியைச் சேர்ந்த 77 நரிக்குறவர்கள் நன்றி தெரிவித்து கொண்டாடினர்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (7.3.2025) திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வீரன் நகரில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு கழகத்தின் சார்பில், 77 நரிக்குறவர்களுக்கு வீட்டுமனை பட்டா மற்றும் தலா 5.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான ஆணைகளை அவர்களின் இல்லங்களுக்கே நேரில் சென்று வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது நரிக்குறவர் இன மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு பாசி மாலைகளை அணிவித்தும், கைகுலுக்கியும், தங்கள் இல்லங்களுக்கு அழைத்துச் சென்று உபசரித்தும், குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அவரது கைகளை இறுகப்பற்றியும் வீட்டுமனை பட்டா மற்றும், தலா 5.00 லட்சம் ரூபாய் செலவில் வீடு கட்ட ஆணைகளையும் வழங்க உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், வழங்கிய துணை முதலமைச்சர் அவர்களுக்கும் தங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

பின்னர் திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் வேளூர் ஊராட்சியில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையத்தில் வருகைப்பதிவேட்டினை பார்வையிட்டு ஆய்வு செய்து, குழந்தைகளின் வருகையை உறுதி செய்ததுடன் குழந்தைகளுடன் கலந்துரையாடி அவர்களுடைய கற்றல் திறனை ஆய்வு செய்தார்.

இதனைத் தொடர்ந்து திருத்துறைப்பூண்டி நகராட்சியில் 7.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலைய கட்டுமான பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் தூய்மைப் பணியாளர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டைகளை வழங்கினார்.

பின்னர் மன்னார்குடி நகராட்சியில் 46.46 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பிரமாண்டமாக உருவாகிவரும், புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலைய கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் நீடாமங்கலத்தில் நெடுஞ்சாலைத்துறையின் மூலம் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பாலப்பணிகள் விரைவாக நடைபெற்று முடிவடைய எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு.ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.வை.செல்வராஜ், திரு.ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பூண்டி.கே.கலைவாணன், திரு. க.மாரிமுத்து, தாட்கோ தலைவர் திரு.உ.மதிவாணன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனசந்திரன்,இ.ஆ.ப., நகராட்சித் தலைவர்கள் திரு.த.சோழராஜன்(மன்னார்குடி), திருமதி கவிதா பாண்டியன் (திருத்துறைப்பூண்டி) உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu